தலைவி காதல்

Written by
Sunday, 24 August 2008 15:12 -

சோலையிலோர் நாள் எனையே தொட்டிழுத்து முத்தமிட்டான்
துடுக்குத் தனத்தை என்சொல்வேன் மாலைப் பொழுதில்இந்த மாயம்புரிந்த செம்மல் வாய்விட்டுச் சிரித்துப் பின் போய்விட்டானேடி தோழி!
சோலையிலோர்...

ஓடி விழிக்கு மறைந்தான் - ஆயினும் என்றன் உள்ளத்தில் வந்து நிறைந்தான்!
வேடிக்கை என்ன சொல்வேன்

மின்னல்போல் எதிர் நின்றான்!
வேண்டித் தழுவச் சென்றேன்
தாண்டி நடந்து விட்டான்! சோலையிலோர்...

அகம் புகுந்தான் சேயோ - அவனை எட்டி அணக்க வழிசொல் வாயோ!
சகம் பெறும் அவன்அன்று
தந்த துடுக்கு முத்தம்!
சக்ரவாகம் போல்வந்தான்;
கொத்திப்போக மறந்தான்!
சோலையிலோர்...

http://www.tamilnation.org/literature/bharathidasan/mp165kaathal.htm#dt117

1 / 1